19.09.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

# பருப்பு விலை மேலும் சரியும்! சாகுபடிப் பரப்பளவு 33% அதிகரிப்பு



பருப்பு வகைகள் உற்பத்தியில் இந்தியா தன்னிறைவு பெறுவதற்கு அதிக காலம் பிடிக்கலாம். ஆனால், தற்போதையை காரீஃப் பருவத்தில் பயறு வகைகள் சாகுபடிப் பரப்பளவு கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் சுமார் 33 சதவீதம் அளவுக்கு அதிகரித்துள்ளது. இதனால், கடந்த ஆண்டு மத்திய, மாநில அரசுகளுக்கு பெரும் நெருக்கடியை அளித்து வந்த பருப்பு வகைகளின் விலை இப்போது கணிசமாக குறைந்துள்ளது. இது மேலும் சரியும் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. மத்திய அரசு அண்மையில் வெளியிட்ட புள்ளி விவரங்களின் மூலம் சாகுபடிப் பரப்பளவு அதிகரித்துள்ளது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து, புரதச் சத்து அதிகமுள்ள பருப்பு வகைகளின் விலை குறைவதுடன் தேவைப்பாடும்

சமாளிக்கக்கூடிய அளவிலேயே இருக்கும் என்று சந்தை வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு (2015) மார்ச் மாதத்திலிருந்து பருப்பு வகைகளின் விலை கிடுகிடுவென அதிகரித்தது. இந்த நெருக்கடி நவம்பர் மாதம் வரை தொடர்ந்தது. மத்திய அரசு கூடுதல் அளவில் பருப்பு வகைகளை இறக்குமதி செய்ததுடன், பதுக்கலைத் தடுக்கவும், மொத்த வியாபாரிகள் பருப்புகளை இருப்பு வைப்பதற்கான விதிமுறைகளை கடைப்பிடிக்கிறார்களா என்பதைக் கண்டறியவும் அதிரடி நடவடிக்கை எடுத்தது.

இது தொடர்பாக மாநில அரசுகளுக்கும் தகுந்த உத்தரவுகளைப் பிறப்பித்தது. இதைத் தொடர்ந்து, கடந்த ஆண்டு மட்டும் சுமார் 1.33 லட்சம் டன் பருப்பு வகைகள் பறிமுதல் செய்யப்பட்டு குறைந்த விலையில் வெளிமார்க்கெட்டுக்கு விநியோகம் செய்யப்பட்டது. மேலும், அதிக அளவில் பருப்பு வகைகளை இறக்குமதி செய்யவும், கூடுதல் இருப்பு வைக்கவும் மத்திய அரசு நடவடிக்கை எடுத்தது. இதுவும் விலை குறைய முக்கியக் காரணமாக இருந்தது. இந்நிலையில், இந்த ஆண்டு பயறு வகைகளின் சாகுபடிப் பரப்பளவு சுமார் 33 சதவீதம் அதிகரித்துள்ளதாக புள்ளிவிவரங்களின் மூலம் தெரிய வந்துள்ளது. கடந்த ஆண்டு பயறு வகைகளின் மொத்த சாகுபடிப் பரப்பளவு 106.92 லட்சம் ஹெக்டேராக இருந்தது. ஆனால், இந்த ஆண்டு இது 142.02 லட்சம் ஹெக்டேராக (33 சதவீதம்) உயர்ந்துள்ளது. இந்த காரீஃப் பருவத்தின் மொத்த பரப்பளவுடன் ஒப்பிடுகையில் இது 39 சதவீதம் அதிகமாகும்.

ஏழைகள் முதல் பெரும் பணக்காரர்கள் வரை அதிகம் பயன்படுத்தும் துவரம் பருப்பின் விலை, கடந்த ஆண்டு கிலோ ரூ. 200 வரை உயர்ந்து மத்திய, மாநில அரசுகளுக்கு கடும் சவாலாகத் திகழ்ந்தது. பின்னர், மத்திய அரசின் கடும் கிடுக்கிப்பிடியைத் தொடர்ந்து, படிப்படியாக விலை குறையத் தொடங்கியது. இந்த ஆண்டு ஜெய்ப்பூர், கோரக்பூர், ரூர்கேலா உள்பட முக்கிய 8 நகரங்களில் தற்போது துவரம் பருப்பு ரூ.100-க்கும் குறைவாக விற்கப்படுவதாக சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால், கடலைப் பருப்பின் விலை மட்டும் குறையவில்லை. இந்த ஆண்டு மற்ற பயறு வகைகளின் சாகுபடிப் பரப்பளவுடன் ஒப்பிடுகையில், துவரை சாகுபடி முன்னிலையில் உள்ளது. குறிப்பாக பருப்பு வகைகளின் ஆதரவு நிர்ணய விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால், நல்ல வருவாய் கிடைக்கும்

என்று விவசாயிகள் எதிர்பார்ப்பதால், சாகுபடிப் பரப்பளவும் கணிசமான அளவு அதிகரித்துள்ளதாக சந்தை வல்லுநர்கள் கருதுகின்றனர்.

இதன் காரணமாக இந்த நிதியாண்டில் (2016-17) பருப்பு வகைகள் உற்பத்தி 20 மில்லியன் டன்னை தாண்டும் என்று மத்திய விவசாயத் துறை கருதுகிறது. 1957-ஆம் ஆண்டுக்குப் பிறகு இதுவே அதிகபட்ச அளவாகும் என்றும் அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன. 2014-15 நிதியாண்டில் பருப்பு வகைகளின் உற்பத்தி 17.15 மில்லியன் டன்னாகவும், 2015-16-இல் 16.47 மில்லியன் டன்னாகவும் இருந்ததாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

பருப்பு வகைகளைப் பொருத்தவரையில், நமது நாட்டின் தேவைப்பாட்டை சமாளிக்க இறக்குமதியைச் சார்ந்து இருக்க வேண்டிய நிலைதான் உள்ளது. இந்நிலையில், உற்பத்தி அதிகரிப்பதன் மூலம் பருப்பு வகைகளின் சில்லறை விலை மக்களுக்கு கட்டுப்படியாகக் கூடிய வகையில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது ஒருபுறம் இருக்க, இந்த காரீஃப் பருவத்தில் நெல்,பெரும் தானியங்கள், எண்ணெய் வித்துகள் ஆகியவற்றின் சாகுபடிப் பரப்பளவும் வெகுவாக அதிகரித்துள்ளதாக புள்ளிவிவரங்களின் மூலம் அறிய முடிகிறது. அதே சமயத்தில் பருத்தி, கரும்பு, சணல் உள்ளிட்டவற்றின் சாகுபடிப் பரப்பளவு கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் சற்றுக் குறைந்துள்ளதாகத் தெரிகிறது.

இருப்பினும், மொத்தத்தில் இந்த காரீஃப் பருவ சாகுபடிப் பரப்பளவு 1,033.99 லட்சம் ஹெக்டேராக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இது வறட்சி நிலவிய கடந்த ஆண்டு 997.11 லட்சம் ஹெக்டேராக இருந்தது. அதனுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு பரப்பளவு சுமார் 3.7 சதவீதம் அதிகமாகும்.

தென்மேற்குப் பருவ மழை ஜூன் மாதம் தொடங்கி செப்டம்பர் மாதம் இடைப்பட்ட காலம் வரை இருக்கும். இந்தக் காலத்தில்தான் காரீஃப் பருவ சாகுபடிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு ஜூன் மாதம் சாகுபடி செய்த பயிர்களின் அறுவடை பொதுவாக அக்டோபரில் நடைபெறும். மேலும், நீர்த் தேக்கங்களில் தண்ணீர் இருப்பும் போதுமான அளவு இருப்பதாகக் கூறப்படுவது இந்தக் குளிர்காலத்தில் காரீஃப் பருவம் விவசாயிகளுக்கு பெரும் மகிழ்ச்சியை அளித்துள்ளது.

மத்திய அரசின் நீர் ஆணையம் அண்மையில் வெளியிட்ட புள்ளிவிவரத்தில் நாட்டில் முக்கியமான 91 நீர்த் தேக்கங்களில் 105.248 பில்லியன் கன மீட்டர் நீர் இருப்பு உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது மொத்தக் கொள்ளளவில் 67

சதவீதமாகும். கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் நீர் இருப்பு இந்த ஆண்டு சுமார் 114 சதவீதம் அதிகமாகும். மேலும், இந்த நீரானது இந்த செப்டம்பர் வரையிலும் பாசனத்துக்குப் போதுமானதாக இருக்கும் என்று கருதப்படுவதால் காரீஃப் பருவ சாகுபடி நன்றாக இருக்கும் என்று நம்பப்படுகிறது. -எம்.சடகோபன்

## 2016-17 நிதியாண்டில் மொத்த பயறு வகை சாகுபடி அதிகம் நடைபெறும் 5 முக்கிய மாநிலங்கள்

ராஜஸ்தான் 9.75 லட்சம் ஹெக்டேர்

மத்திய பிரதேசம் 6.78 லட்சம் ஹெக்டேர்

மகாராஷ்டிரம் 6.29 லட்சம் ஹெக்டேர்

கர்நாடகம் 5.93 லட்சம் ஹெக்டேர்

தெலங்கானா 4.16 லட்சம் ஹெக்டேர்

**நாட்டில் பயறு வகை சாகுபடி மொத்தப் பரப்பளவு**

துவரை 51.77 லட்சம் ஹெக்டேர்

உளுந்து 36.36 லட்சம் ஹெக்டேர்

பாசிப் பயறு 33.04 லட்சம் ஹெக்டேர்

மற்ற பயறு வகை 22.83 லட்சம் ஹெக்டேர்

**ஆண்டுவாரியாக மொத்த பயறு வகைகளின் சாகுபடிப் பரப்பளவு (ஆகஸ்ட் இறுதி வார நிலவரப்படி)**

2014-15 095.40 லட்சம் ஹெக்டேர்

2015-16 106.92 லட்சம் ஹெக்டேர்

2016-17 142.02 லட்சம் ஹெக்டேர்

**2015 அக்டோபர் நிலவரப்படி முக்கிய நகரங்களில் நிலவிய பருப்பு வகைகளின் விலை (1 கிலோவுக்கு ரூபாயில்)**

நகரம் கடலைப் பருப்பு துவரம் பருப்பு உளுந்து பாசிப் பருப்பு

புது தில்லி 73 177 157 114

மும்பை 72 173 160 109

கொல்கத்தா 72 188 140 128

சென்னை 75 173 160 130

**2016 ஆகஸ்ட் மாதம் இறுதி வார நிலவரப்படி முக்கிய நகரங்களில் நிலவிய பருப்பு வகைகளின் விலை (1 கிலோவுக்கு ரூபாயில்)**

நகரம் கடலைப் பருப்பு துவரம் பருப்பு உளுந்து பாசிப் பருப்பு

புது தில்லி 107 124 142 88

மும்பை 111 120 156 89

கொல்கத்தா 100 120 130 92

சென்னை 111 136 146 86

**வேளாண் விரிவாக்க மையங்களில் மான்யத்துடன் விதை விநியோகம்**

கரூர் வட்டாரக்தில் நடப்பு சம்பா பருவக்கில் நெல் நடவு பணி மேற்கொள்ள ஏதுவாக போதிய அளவு விதை நெல் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

ஐ.ஆர். 20 க்கு மாற்றாக அதே குணங்களைக் கொண்ட கோ.ஆர் 50 குறுகிய கால சன்ன ரக நெல்லும், ஆந்திர பொன்னிக்கு மாற்றாக அதிக மகசூல் தரவல்ல கோ.ஆர் 51 மத்திய ரக நெல்லும் இருப்பில் உள்ளது. தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் கிலோ விதைக்கு ரூ.10 மானியம் வழங்கப்படும்.

விவசாயிகள் உரிய சான்றுடன் வெண்ணமலை,வேலாயுதம்பாளைம் துணை வேளாண் விரிவாக்க மையங்களையோ அல்லது 91598 09701 என்ற எண்ணிலோ தொடர்பு கொள்ளுமாறு கரூர் வெண்ணைமலை வேளாண் விரிவாக்க மைய உதவி இயக்குநர் ப. சிவானந்தம் இதுதொடர்பாக வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நெல்லிக்கனியை மதிப்புக்கூட்டி பொருள்கள் தயாரிக்கும் பயிற்சி**

ராமநாதபுரம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில், நெல்லிக்கனியை மதிப்புக்கூட்டி பொருள்கள் தயாரிப்பது தொடர்பான ஒருநாள் இலவசப் பயிற்சி முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடைபெற்ற இப்பயிற்சி முகாமை, வேளாண்மை அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியர் ஜெ. ராம்குமார் தொடக்கி வைத்தார். முனைவர் ச. ஆரோக்கிய மேரி நெல்லிக்கனியிலிருந்து மிட்டாய், ஜூஸ், பாக்கு தயார் செய்வது செயல்முறை விளக்கம் அளித்தார்.

பயிற்சியின்போது, நெல்லிக்கனியின் மகத்துவம் குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது. இதன்மூலம் அதிக வருமானம் ஈட்டலாம் என்றும் விளக்கப்பட்டது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வண்ண உணவுகள்**

புரதம், கார்போஹைட்ரேட், கொழுப்பு, தாது உப்புகள், வைட்டமின்கள் ஆகியவை சரிவிகித அளவில் உள்ள உணவை அலோபதி மருத்துவம் சரிவிகித உணவு என்கிறது. இனிப்பு, உவர்ப்பு, கசப்பு, துவர்ப்பு, புளிப்பு, காரம் ஆகிய அறுசுவைகள் கொண்ட உணவை சரிவிகித உணவு என ஆயுர்வேதம் கூறுகிறது. சத்துக்கள், சுவைகள் தவிர நிறங்களும் சரிவிகித உணவாக இருக்க வேண்டும் என்ற புதிய கருத்து உணவியல் துறையில் பரிந்துரை செய்யப்படுகிறது. இதனை 'வானவில் உணவு' என கூறுகின்றனர். நம்முடைய உணவு எல்லா நிறங்களும் இடம் பெற்று வண்ண மயமாக இருக்க வேண்டும் என்பதே இதன் கருத்து. இந்த நிறங்கள் செயற்கை நிறங்களாக இருக்காமல் இயற்கை நிறங்களாக இருக்க வேண்டும்.

## கிருஷ்ணகிரி மாவட்டத்தில் குட்டை ரக செண்டுமல்லி சாகுபடி பரப்பு அதிகரிப்பு

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், குட்டை ரக செண்டு மல்லி சாகுபடி பரப்பு அதிகரித்துள்ளது.

கோவில்களில் பூஜைக்கும், மாலை கட்டவும் செண்டு மல்லி பூக்கள் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் ஆண்டு முழுவதும் செண்டு மல்லி பூவுக்கு கிராக்கி இருக்கும். குறிப்பாக, விநாயகர் சதுர்த்தி, ஆயுதபூஜை, தீபாவளி போன்ற சமயங்களில், இந்த பூக்களின் விலை அதிகளவில் உயரும். நெட்டை ரக செண்டுமல்லியில், ஆண் பூக்கள் அதிகம் பூப்பதால், அதை பயன்படுத்த முடியாத நிலையில், விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டு வந்தது. இந்நிலையில், நடப்படும் அனைத்து செடிகளிலும் பெண் பூக்கள் பூக்கும் வகையில், குட்டை ரக செண்டு மல்லி செடி சாகுபடி கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அதிகரித்துள்ளது. மாவட்டத்தில், காட்டிநாயனப்பள்ளி, பூசாரிப்பட்டி, மேகலசின்னம்பள்ளி, கம்மம்பள்ளி ஆகிய இடங்களில் செண்டு மல்லி அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. நெட்டை ரக செண்டுமல்லியை காட்டிலும், இந்த குட்டை ரக செண்டு மல்லியில் அதிக பூக்கள் கிடைப்பதால், பல விவசாயிகள் இதை சாகுபடி செய்ய ஆர்வமுடன் முன் வந்துள்ளதால், தற்போது கிருஷ்ணகிரி மாவட்டத்தில், குட்டை ரக செண்டுமல்லி சாகுபடி பரப்பு அதிகரித்துள்ளது. இதுகுறித்து செண்டுமல்லி சாகுபடி செய்துள்ள விவசாயிகள் கூறுகையில், 'கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஏற்கனவே, 200 ஏக்கரில் செண்டுமல்லி சாகுபடி செய்யப்பட்டிருந்தது. தற்போது ஆயுதபூஜை, தீபாவளி என பண்டிகைகள் வருவதால், தற்போது, 450 ஏக்கரில் செண்டுமல்லி சாகுபடி செய்யப்பட்டுள்ளது' என்றனர்.

## கரும்பில் இருந்து கால்நடைகளுக்கு தீவனமாகும் தோகை

நாணப்பரப்பு: கரூர் அருகே நாணப்பரப்பு என்ற இடத்தில் உற்பத்தியாகும் கரும்பு தோகைகளை உரித்து கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படுத்த கட்டுக்களாக கட்டி விவசாயிகள் எடுத்துச் செல்கின்றனர்.

இதுகுறித்து, விவசாயி நாணப்பரப்பைச் சேர்ந்த ஆறுமுகம் கூறியதாவது: கரூரில் இருந்து நாமக்கல் செல்லும் வழியில் தேசிய நெடுஞ்சாலையோரம் நாணப்பரப்பு உள்ளிட்ட பல்வேறு கிராமங்கள் அமைந்துள்ளன. இங்கு சர்க்கரை ஆலைகளுக்கு தேவையான கரும்புகளை பதிவு செய்து கிணற்றுப்பாசனம் மூலம் வளர்த்து வருகின்றனர். ஆலைக்கரும்பின் தோகைகளை வெட்ட, வெட்ட ஆறடி வரை நன்கு வளரும். அதன்பின் அவர்களே வந்து கரும்பை வெட்டி எடுத்துச் சென்று விடுவர். இடை, இடையே ஊடுபயிர் பயிரிட முடியாது. அருகில் தான் சோளம் போன்ற மானாவரி பயிர்களை பயிரிட முடியும். நாங்கள் கரும்பின் தோகைகளை உரித்து அதை கட்டுக்கட்டாக கட்டி ஆடு, மாடுகளுக்கு தீவனமாக பயன்படுத்துகிறோம். அத்துடன் சோளத்தட்டுக்களையும் சேர்த்துக் கொடுத்தால் கால்நடைகள் நன்கு வளரும். இங்கு மட்டுமல்ல கரும்பு பயிரிட்ட அனைத்து இடங்களிலும், விவசாயிகள் கரும்பின் தோகைகளை வெட்டி எடுத்துச் சென்று கால்நடைகளுக்கு உணவாகக் கொடுக்கின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

## உப்பிடமங்கலம் வாரச்சந்தை: பசுமாட்டின் விலை ரூ.65 ஆயிரம்

உப்பிடமங்கலம்: கரூர் மாவட்டம், உப்பிடமங்கலம் டவுன் பஞ்சாயத்து அருகே வாரச்சந்தையும், மாட்டுச்சந்தையும் செயல்பட்டு வருகிறது. சனிக்கிழமை இறைச்சிக்கு வெட்டு மாடும், ஞாயிற்றுக்கிழமை பால் கறக்கும், பசு மாடும் கன்றுகளுடன் விற்பனைக்கு வரும். சின்னகவுண்டனூர், ரங்கபாளையம், வெண்ணிலை, லிங்கத்தூர், மற்றும் சுற்றுப்புற மாவட்டங்களில் இருந்தும் மாடுகள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டது. பால் கறக்கும் எருமை மாடு கன்றுடன், 55 ஆயிரம் ரூபாய் வரையும், பால் கறக்கும் பசுமாடு, 65 ஆயிரம் ரூபாய் வரை விலை போனது. விவசாயிகளும், வியாபாரிகளும், தங்களுக்கு கட்டுப்படியான விலைக்கு,

மாட்டை விற்றுச்சென்றனர். வாரம்தோறும் வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் மாடு வாரச்சந்தை துவங்கி, ஞாயிறு காலை, 10:00 மணிக்குள் முடிவது வழக்கம்.

**வெற்றிலை பயிரிட நாணல் தட்டைகள்: வே.பாளையத்தில் விற்பனைக்கு தயார்**

வே.பாளையம்: வேலாயுதம்பாளையம் உள்ளிட்ட சுற்றுப்பகுதியில் வெற்றிலை பயிர் நடுவதற்குத் தேவையான நாணல் தட்டைகளை விற்பதற்காக தொழிலாளர்கள் கட்டுக்கட்டுக்களாக கட்டி அடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கரூர் அடுத்த வேலாயுதம்பாளையம் சுற்றுப்பகுதி கிராமங்களில், அதிகளவில் வெற்றிலை பயிரிடப்பட்டு வருகிறது. இதன் காரணமாக வெற்றிலை பயிருக்கு தூணாக விளங்கும் நாணல் தட்டுக்களைக் கொண்டு வந்து விலைக்கு விற்க கட்டுகளாக கட்டி அடுக்கி வைக்கும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுகுறித்து, நாணல் தட்டு கட்டுகளை விற்கும் தொழிலாளி பெரியசாமி கூறியதாவது: ஆற்றங்கரையோரம், வாய்க்கால்கள், நீர்நிலைகள் தேங்கும் இடங்களில் தான் இந்த நாணல்கள் நன்கு செழிப்பாக வளரும். மாவட்டத்தில் காவிரியாற்றங்கரையோரமும், வாய்க்கால்கள் ஓடும் பகுதிகளிலும், ஓரளவு நாணல்கள் கிடைக்கிறது. ஆனால், ஸ்திரத்தன்மையாக இல்லை. ஆனால், இவை இப்பகுதியில் வெற்றிலை பயிரிடும் விவசாயிகளுக்குப் போதுமானதாக இல்லை. பொள்ளாச்சி, தேனி மற்றும் மலைப்பாங்கான நீரோடும் இடங்களில் இருந்து கூடுதலாக நாணல் தட்டைகளை வாங்கி வருகிறோம். அங்கு விளையும் நாணல்கள் ஸ்திரத்தன்மையுடன் காணப்படுகிறது. ஒரு நாணல் தட்டை கட்டில், 100 குச்சிகள் இருக்கும். இவை, 150 ரூபாய்க்கு விற்பனையாகிறது. இவற்றை விவசாயிகள் வாங்கிச் சென்று வெற்றிலை வளரவும், படரச் செய்யவும் நாணல் குச்சிகளை பயன்படுத்துகின்றனர். ஒருமுறை வெற்றிலைக் கொடிக்காலில் நாணல் குச்சிகளை நட்டுவிட்டால் ஓராண்டு வரை தாக்கு பிடிக்கும், அதன்பின் வெற்றிலை விவசாயம் முடிந்த பின் இதுவும் கருகி விடும். இவ்வாறு அவர் கூறினார்.

## சூரியஒளி மின்சாரத்தில் விவசாயம்: பூஞ்சோலை விவசாயி புது முயற்சி

கிருஷ்ணராயபுரம்: கிருஷ்ணராயபுரம் அடுத்த பூஞ்சோலை பகுதி விவசாயி, சூரியஒளி மின்சாரம் மூலம் விவசாயம் செய்து வருகிறார். கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் அடுத்த பூஞ்சோலை கிராம விவசாயிகள், தற்பொது அவர்களுக்கு தேவையான மின் தேவையை பூர்த்தி செய்யும் விதமாக, தங்கள் விளை நிலங்களில் சூரிய மின்சக்தியை பயன்படுத்தி வருகின்றனர். அதன்மூலம், பல்வேறு வகைகளில் விவசாயம் செய்யும் பணிகளில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதுகுறித்து, அப்பகுதியை சேர்ந்த விவசாயி சுப்பிரமணியன் கூறியதாவது: இன்றைய சூழ்நிலையில், நவீன முறை விவசாயத்தில், பெரும்பாலான விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். அதன்படி, இப்பகுதியில் உள்ள விவசாயிகள், சூரியஒளி மின்சாரம் மூலம் விவசாயம் செய்து வருகிறோம். தற்பொது, சூரிய மின்சாரம் தயாரிக்கும் சோலார் பேனல்கள், நான்கு லட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட்டு, மோட்டார் மூலம் எடுக்கிறோம். குறைந்த செலவில், அதிக லாபம் தரக்கூடிய பப்பாளி சாகுபடி செய்து, மாதம், 10 ஆயிரம் ரூபாய் வரை வருமானம் பெறுகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

## கால்நடை தீவனப்பயிர் சாகுபடி விவசாயிகளுக்கு மானியம்

தேனி: தீவனப்பயிர் சாகுபடி மற்றும் தீவன விதைகள் உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளுக்கு கால்நடைதுறை சார்பில் 100 சதவீதம் மானியம் வழங்கப்பட உள்ளது.
கால்நடை பராமரிப்பு துறை சார்பில் தீவன அபிவிருத்தி திட்டங்கள் பால்வள நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தப்படவுள்ளது. அதனடிப்படையில், இறவையில் தீவனப்பயிர் சாகுபடி திட்டத்தின் கீழ் அதிக மகசூல் தரும் கம்பு பயிரிடும் திட்டம் 250 ஏக்கரிலும்.
மானாவரியில் தீவனப்பயிர் சாகுபடி திட்டத்தின் கீழ் தீவனச்சோளம், தீவன தட்டைப்பயிறு பயிரிடும் திட்டம் 1000 ஏக்கரில் செயல்படுத்தப்படவுள்ளது.

இதற்காக தீவனச்சோளம் மற்றும் தீவனதட்டைப்பயிறு விதைகள் 100 சதவீதம் மானியத்திலும், தீவன கரணை, தீவன விதைகள் 100 சதவீத மானியத்திலும் வழங்கப்பட உள்ளது.

அறுவடையின் பொழுது அவர்களிடமிருந்து சந்தை மதிப்புடன் கூடுதலாக கிலோ ஒன்றுக்கு ரூ.10 ஊக்கத்தொகை அளிக்கப்பட்டு விதைகள் கொள்முதல் செய்யப்படவுள்ளது. தீவனச் சோள விதைகள் 15 ஏக்கரிலும், தீவன தட்டைப் பயிறு விதைகள் 15 ஏக்கரிலும் உற்பத்தி செய்யப்பட உள்ளது.

பயிற்சி தொகை: நவீன தீவன உற்பத்தி தொழில்நுட்பங்கள் பயிற்றுவிக்கும் திட்டத்தின் கீழ் 100 கால்நடை வளர்ப்போருக்கு செட்டிநாடு மாவட்ட கால்நடை பண்ணையில் பயிற்சி அளிக்கப்படவுள்ளது. இதற்காக அவர்களுக்கு தலா 500 ரூபாய் பயிற்சி தொகையாக வழங்கப்படவுள்ளது. புரசத்து மிகுந்த அசோலா பாசி வகை பசுந்தீவன உற்பத்தி திட்டத்தில் 120 பேருக்கு 100 சதவீத மானியத்தில் பிளாஸ்டிக் தட்டுகள் வழங்கப்படும். விலையில்லா வெள்ளாடு, செம்மறி ஆடுகள் வழங்கப்பட்ட 1,500 பயனாளிகளுக்கு தலா 10 அகத்தி மரக்கன்றுகள் 100 சதவீத மானியத்தில் வழங்கப்பட உள்ளது. எனவே விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் அருகிலுள்ள கால்நடை பராமரிப்புத்துறை அலுவலகங்களை தொடர்பு கொண்டு பயனடையலாம் என, கலெக்டர் வெங்கடாசலம் தெரிவித்துள்ளார்.

## பனங்கருப்பட்டி வரத்து குறைவு: விலை உயர்வு

போடி: பனங்கருப்பட்டி வரத்து குறைவால் கிலோவிற்கு 200 ரூபாய் அதிகரித்து, சிப்பம் 2 ஆயிரம் ரூபாய் ஆகவிலை உயர்ந்துள்ளது.

திருநெல்வேலி, துாத்துக்குடி மாவட்டங்களில் பனங்கருப்பட்டி அதிகளவில் தயாரிக்கின்றனர். இது மருத்துவ குணம் அதிகம் இருப்பதால் பிரசவித்த பெண்களும் பொது மக்கள் அதிகளவில் விரும்பி வாங்குகின்றனர்.

பனங்கருப்பட்டி மொத்த விலையில் கடந்த மாதம் 10 கிலோ கொண்ட சிப்பம் 1,400 ரூபாய்க்கு விற்பனையானது. கடந்த வாரம் 200 முதல் 400 ரூபாய் வரை விலை உயர்ந்து 1,800 ரூபாயாக இருந்தது. தற்போது ஒரு சிப்பம் 1,900 முதல் 2 ஆயிரம் ரூபாயாக விலை உயர்ந்துள்ளது. இதனால் சில்லரையில் கிலோ 210 முதல் 220 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகின்றன.

பனங்கருப்பட்டி வரத்து குறைந்து ஒரே வாரத்தில் கிலோவிற்கு 200 ரூபாய் விலை அதிகரித்துள்ளது. இதனால், சில்லரை வியாபாரிகளும், பொதுமக்களும் பனங்கருப்பட்டி வாங்க தயக்கம் காட்டி வருகின்றனர்.

## ரசாயன கலப்பின்றி வேம்பு ஆயிலில் கதர் பார்

காரைக்குடி: 20 ஆண்டுக்கு முன்பு வரை மளிகை கடையில் அண்ணே ஒரு சோப்பு கட்டி கொடுங்க' என்று கேட்போம். கடை பணியாளர் ஒரு நுாலால் ராட்டை முத்திரையிட்ட நீள பார் சோப்பை நமக்கு தேவையான அளவு, வெட்டி கொடுப்பார். ரசாயன கலப்பின்றி, இயற்கையாக கிடைக்கும் வேப்ப எண்ணெய் கலப்பிலான சோப்பு தான் இந்த கதர் பார்.

இன்றோ, நவீனம் என்ற பெயரில், வீட்டிற்குள் புகுந்த கெமிக்கல் அரக்கனாக தற்போதைய சோப்புகள் மாறி வருகின்றன. துணி துவைக்க பயன்படும் சோப்பு மற்றும் பவுடரில் ரசாயன வாசனை, துவைத்த துணியை மணமாக்க செயற்கை வாசனை திரவியம்,மூக்கை மட்டுமல்ல நுரையீரலையும் துளைக்கும் ஸ்பிரே, ஆஸ்துமாவை இழுத்து வரும் நாப்தலின் உருண்டை என எங்கெங்கும் காணினும் கெமிக்கல் அராஜகம்.

கோடிக்கணக்கில் விற்பனையாகும் இந்த செயற்கை ரசாயன கலவைகள் மூலம் அலர்ஜி, ஆஸ்துமா அழையா விருந்தாளியாக வீட்டில் தங்கி விடுகிறது, என்பதை நம் உணர்வதில்லை.

காற்று மாசு என்பது வெளியில் உள்ள கார்பன் மட்டுமல்ல. நாம் வீட்டில் உபயோகப்படுத்தும் ரசாயன பொருட்களால் எழும் வாசமும் சேர்ந்து தான். இந்த ரசாயன மாற்றங்கள் சாதாரண இருமலில் ஆரம்பித்து, தீராத வியாதியில் கொண்டு வந்து விடும். இதை தடுக்க இயற்கையான முறையில் உள்ள பொருட்களை அன்றாட வாழ்வில் கொஞ்சம், கொஞ்சமாக பயன்படுத்தி கொள்ள பழக வேண்டும்.

எவ்வளவோ செயற்கை வந்து விட்ட பிறகும், இன்றும் இயற்கையாக சர்வோதய சங்கம் மற்றும் கதர் வாரியத்தால் தயாரிக்கப்படும் பார் சோப்பின் விற்பனை விரும்பப்படுகிறது,என்பது ஆறுதலான செய்தி.

காரைக்குடி ரஸ்தா சர்வோதய சங்க வளாகத்தில் துணி துவைக்க பயன்படும் கதர் பார் சோப் தயாரிப்பு தொழில் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. கதர் பார் சோப்'

என்று கூறுவதை விட ஆயில் சோப் என்று அழையுங்கள் என்கிறார் சங்க செயலாளர் செல்வராஜ்.

அவர் கூறும்போது: சுத்தமான தண்ணீரில் காஸ்டிக் சோடா, வேப்ப எண்ணைய், உப்பு கலந்து இந்த சோப்பு தயாரிக்கப்படுகிறது. 100 சதவீத வேப்ப எண்ணெய்யில் காஸ்டிக் சோடாவின் கலப்பு 5 சதவீதம் மட்டுமே. 10 மணி நேரம் வரை நான்கு கட்டங்களாக கொதிக்க வைத்து தயாரிக்கப்படுகிறது.

அவ்வாறு செய்யும்போது, தண்ணீரில் உள்ள கழிவு, வேப்ப எண்ணெய்யில் உள்ள கழிவு வெளியேற்றப்படுகிறது. காஸ்டிக் சோடா குறைந்த அளவே சேர்க்கப்படுவதால் கை அரிக்காது.
அதனால்தான் இந்த சோப்பை வசதியில்லாதவர்கள் முன்பு குளியல் சோப்பாகவும் பயன்படுத்தினர். துணி எந்த காலத்திலும் சேதமுறாது.20 ஆண்டுக்கு முன்பு வரை ஆயிரம் சோப்பு விற்ற இடத்தில் தற்போது 300 முதல் 400 வரையே விற்கப்படுகிறது.

அதற்கு காரணம், தேய்த்தவுடன் நுரை வரவேண்டும் என்ற தவறான எண்ணத்தால் தான். கிராமங்களில் கண்மாய், குளம் உள்ளிட்ட நீர் நிலைகளில், துணி துவைப்பவர்கள் இந்த சோப்பையே பயன்படுத்துகின்றனர். ஆண்டுக்கு ரூ.10 முதல் 12 லட்சம் வரை சோப்பு விற்பனையாகிறது, 12 கட்டி கொண்ட ஒரு பாரின் விலை ரூ.48, என்றார்.
ரசாயனத்தின் புதை குழிக்குள் விழாமல் இயற்கையான பொருட்களை பயன்படுத்தி செல்வமான உடலையும், அழகான உலகையும் காப்போம்.

## வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி

பாப்பாரப்பட்டி: பாப்பாரப்பட்டி அடுத்த மலையூர் மலை கிராம விவசாயிகளுக்கு, வேளாண்மை விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ், வேளாண்மை துறையில் உள்ள புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி, மானாவாரி சாகுபடியில் அதிக மகசூல் பெறுவது குறித்தும், புதிய தொழில் நுட்பங்கள் குறித்தும் பயிற்சி நடந்தது. இதில் பட்டுவளர்ச்சித்துறை உதவி ஆய்வாளர் கிருஷ்ணன், இளநிலை ஆய்வாளர்கள் பிரபா, வைரவேல் ஆகியோர் மர மல்பரி நடவு, வெண்பட்டு உற்பத்தி குறித்து பயிற்சி அளித்ததுடன், பட்டு வளர்ப்பு மற்றும் மல்பரி நடவுக்குள்ள மானிய திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தனர்.

தோட்டக்கலைத்துறை சார்பில், பழங்கள் மற்றும் காய்கறி சாகுபடியில் புதிய தொழில் நுட்பங்களை பயன்படுத்தி, அதிக மகசூல் பெறுவது குறித்தும், மானாவாரி சாகுபடியில் உயர் விளைச்சல் தொழில்நுட்பங்கள், சிறுதானியங்கள், பயறு வகைகளில் விதை நேர்த்தி செய்தல், மண் பரிசோதனை செய்தல் குறித்தும் விளக்கப்பட்டது. மேலும், பண்ணை குட்டையின் நன்மைகள், ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரித்தல் குறித்து விளக்கப்பட்டது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மணத்தக்காளிக் கீரை**



வாய்ப்புண்ணா... வயிற்று எரிச்சலா? மணத்தக்காளிக் கீரையுடன் பருப்பு சேர்த்துக் குழைய வேக வைத்து, சூடான சாதத்தில் நெய்விட்டுப் பிசைந்து சாப்பிடக் கொடுப்பார்கள் அந்தக் காலத்தில். இரண்டே நாட்களில் வாய்ப்புண்ணும் வயிற்றுப் புண்ணும் இருந்த இடம் தெரியாமல் மாயமாகும். இன்று வாரக்கணக்கில், மாதக் கணக்கில் பி.காம்ப்ளக்ஸ் மாத்திரைகள் எடுத்துக் கொண்டாலும் கட்டுப்படுவதில்லை வாய்ப்புண்கள். மணத்தக்காளியை மறந்ததன்

விளைவு!

மணத்தக்காளியை கீரைகளில் மாணிக்கம் என்றே சொல்லலாம். சுவையில் மட்டுமின்றி, சத்துகளிலும் அதை மிஞ்ச வேறில்லை. அத்தகைய மணத்தக்காளியின் மகிமைகளைப் பற்றிப் பேசுகிறார் ஊட்டச்சத்து நிபுணர் நித்யஸ்ரீ. மணத்தக்காளியை வைத்து சுவையான, ஆரோக்கியமான 3 உணவுகளையும் செய்து காட்டியிருக்கிறார்.

"பிளாக் நைட் ஷேடு, ஒண்டர் பெர்ரி, சன் பெர்ரி என ஏராளமான சிறப்புப் பெயர்களுடன் அழைக்கப்படுகிற ஒரே கீரை மணத்தக்காளி. இதன் கீரை மட்டுமல்ல... மணத்தக்காளிக் காயும் பழமும்கூட மருத்துவக்குணம் வாய்ந்தவை. மணத்தக்காளி காயை அப்படியே பச்சையாகவோ, காய வைத்து வற்றலாகவோ செய்து சமையலுக்குப் பயன்படுத்தலாம். காய் பழுத்தால் கருஞ்சிவப்பு நிறத்தில் குட்டிக்குட்டியாக கொத்துக் கொத்தாகக் கண்களைக் கவரும். லேசான இனிப்புச் சுவை கொண்ட அதை அப்படியே மென்று தின்னலாம். மணத்தக்காளி செடியை வளர்ப்பது ரொம்பவும் சுலபம். அதற்கு பெரிய மண் வளமோ, தண்ணீரோ தேவையில்லாமல் எளிதில் வளரக்கூடியது. மணத்தக்காளிக்காயும், பழமும் வருடத்தின் எல்லா நாட்களிலும் கிடைப்பதில்லை என்பதால் கிடைக்கும் போது பயன்படுத்திக் கொள்வது நல்லது.

**மணத்தக்காளியின் மருத்துவப்பயன்கள்**

மணத்தக்காளிக் கீரை தசைகளுக்கு வலுவளித்து, பார்வைத் திறனை மேம்படுத்தச் செய்கிறது.

தலைவலியைப் போக்கி, சருமத் தொற்றுகளைப் போக்கக்கூடியது இந்தக் கீரை.

மணத்தக்காளி என்றாலே வாய்ப் புண்ணுக்கும் வயிற்றுப் புண்ணுக்கும் மருந்து என்பதை பலரும் அறிவார்கள். மணத்தக்காளிக் கீரையின் சாறு கல்லீரல் மற்றும் கணையத் தொற்றுகளுக்கு அருமையான மருந்தாகிறது. மட்டுமல்ல... அந்தச் சாறு மூல நோய் மற்றும் சிறுநீர்க் கடுப்பையும் குணப்படுத்தும் குணம் கொண்டது. மலச்சிக்கலை விரட்டக்கூடியது.

மணத்தக்காளிக் கீரை, தண்டு மற்றும் வேர் சேர்த்துக் கொதிக்க வைத்து வற்றச் செய்த கஷாயத்தை புற்றுநோய் காயங்களும், இதர தீராத காயங்களும் ஆறுவதற்குக் கொடுக்கிறார்கள்.

மணத்தக்காளிக் கீரையை விழுதாக அரைத்து மூட்டு வலிக்குப் பற்றுப் போடுகிற வைத்திய முறையும் நம் மக்களிடையே இருக்கிறது.

மணத்தக்காளிக் கீரையின் சாற்றை எடுத்து, உடல் முழுக்கத் தடவி, 3 மணி நேரம் ஊறவிட்டுக் குளிப்பதன் மூலம் உடல் வலி பறந்து போகும் என்கிற நம்பிக்கையும் நிலவுகிறது.

கர்ப்பிணிகள் இந்தக் கீரையை அடிக்கடி சேர்த்துக் கொள்வதன் மூலம் அவர்களது செரிமானம் மேம்படுவதோடு, வாந்தி உணர்வும் கட்டுப்படுகிறது. இந்தக் கீரையில் அதிக அளவில் வைட்டமின்களும் தாதுச் சத்துகளும் உள்ளதால், கர்ப்பிணிகளுக்கு போதுமான ஊட்டத்தைக் கொடுக்கக்கூடியது.

இந்தக் கீரையின் சாறு வாயுத்தொல்லையை விரட்டி, வயிற்றுப்போக்கையும் குணப்படுத்துகிறது.

வயிற்று எரிச்சல், உப்புசம், புண், அஜீரணம் என வயிறு தொடர்பான எல்லா பிரச்னைகளுக்கும் இந்தக்கீரையைப் பரிந்துரைக்கிறார்கள் இயற்கை மருத்துவர்கள்.

மணத்தக்காளிக் கீரை மற்றும் காய் சேர்த்து வைத்த சூப், சளி, இருமலையும் விரட்டுகிறது.

கீரையின் விழுதை தீக்காயங்களின் மேல் தடவிட, காயங்கள் சீக்கிரம் ஆறும்.

களைப்பே தெரியாமல் ஒரு மனிதரை ஓடி ஓடி உழைக்கச் செய்கிற அளவுக்கு ஆற்றலைக் கொடுக்கக்கூடிய வல்லமை இந்தக் கீரைக்கு உண்டு. அதிகம் உழைக்க வேண்டியவர்கள் மணத்தக்காளியை மறக்க வேண்டாம்.

சிலருக்கு வாயுத் தொல்லையால் வயிற்றைப் பிசைகிற மாதிரியான வலி வரும். அவர்கள் மணத்தக்காளிக் கீரை மற்றும் பழம் சேர்த்த சூப்பை குடித்தால் உடனடி

நிவாரணம் பெறுவார்கள். குழந்தைகளுக்கு இதே சூப்பில் தேங்காய்ப்பால் சேர்த்துக் கொடுக்கலாம். சுவையும் கூடும். வாய்ப்புண்ணும் தவிர்க்கப்படும்.

**என்ன இருக்கிறது?**

(100 கிராம் அளவில்)

ஆற்றல் 68 கிலோ கலோரிகள்

ஈரப்பதம் 82 கிராம்

புரதம் 6 கிராம்

கொழுப்பு 1 கிராம்

கார்போஹைட்ரேட் 9 கிராம்

கால்சியம் 410 மி.கி.

பாஸ்பரஸ் 70 மி.கி.

இரும்புச்சத்து 20.5 மி.கி.

வைட்டமின் சி 11 மி.கி.

நியாசின் 0.9 மி.கி.

**மிக்ஸ்!**

மணத்தக்காளிக் கீரையை சாறு எடுத்து அப்படியே குடிக்க முடியாதவர்கள், அதை இளநீர், மோர், தேங்காய்ப்பால் ஆகியவற்றுடன் கலந்து குடிக்கலாம்.

மணத்தக்காளி காய் கிடைக்கிற சீசனில் நிறைய வாங்கி, வெயிலில் காய வைத்து வற்றலாக்கி சேமித்து வைக்கலாம். காய்கறி இல்லாத நேரங்களில் சட்டென கை கொடுக்கும் இந்த வற்றல். இதைக் கொண்டு வற்றல் குழம்பு செய்யலாம்.

வற்றலை வெறுமனே நெய்யில் வறுத்து, சூடான சாதத்தில் பிசைந்து சாப்பிட வயிற்றுக் கோளாறுகள் ஓடிப் போகும்.

**பக்க வாதத்தை தீர்க்கும் வாத நாராயணன்**




நலம் தரும் நாட்டு மருத்துவத்தில் இன்று நாம் பக்க வாதம் வராமல் தடுப்பதை குறித்து பார்க்கலாம். மூளையில் போதிய பிராணவாயு செல்லாமல் இருப்பது, ரத்தம் கட்டிக் கொள்வது போன்றவற்றால் இந்த பக்கவாதம் தோன்றுகிறது. இந்த பக்கவாதத்தை முறியடிப்பது குறித்து அன்றாடம் கிடைக்கும் பொருட்களை கொண்டு எளிய வகையில் மருந்தை தயார் செய்யலாம். வாதநாராயணன் எனப்படும் வாதமடக்கி இலை உடலில் ஏற்படும் வாதத்தை தடுப்பதில் மிக சிறப்பாக செயல்படுகிறது.

பக்கவாதம் வருவதற்கு முன்னதாக உடலில் தேவையற்ற வாதம் ஏற்படாமல் தடுப்பதற்கான தைலம் ஒன்றை நாம் இப்போது தயார் செய்யலாம். இதற்கு தேவையான பொருட்கள் வாதநாராயணன் இலை பொடி. மூக்கிரட்டை வேர் பொடி, விளக்கெண்ணெய். விளக்கெண்ணையை ஒரு டீஸ்பூன் அளவு வாணலியில் எடுத்துக் கொள்ளவும். வாதநாராயணன் இலைப் பொடியை அரை டீஸ்பூன் சேர்க்கவும். மூக்கிரட்டை வேர்பொடியை கால் டீஸ்பூன் அளவு சேர்க்கவும். இதை நன்றாக கலக்கிக் கொண்டு சிறு தீயில் வைத்து நன்றாக காய்ச்சவும்.

இதை மாதம் ஒரு முறை எடுத்துக் கொள்வதன் மூலம் உடலில் தேவையற்ற வாதம் ஏற்படுவதை தடுக்கிறது. இந்த மருந்தை புதிதாக முதன்முறையாக எடுக்கும் போது ஒன்று அல்லது இரண்டு முறை வயிற்றுபோக்கு ஏற்படலாம். இரவு தூங்குவதற்கு முன்பாக இதை ஒரு ஸ்பூன் குடித்து விட்டு படுத்தால் காலையில் வயிற்று போக்கு

உண்டாகும். வாதம் செயல் இழப்பை தருவதைப் போலவே வாதம் அதிகமானால் அதிக துருதுருப்புடன் இருப்பது போன்ற உணர்வு ஏற்படும். அப்போது வியர்வை பிசுபிசுப்புடன் காணப்படும். இதை கொண்டு நாம் நமது உடலை வாத உடல் என்று கண்டு கொள்ளலாம்.

அதே போல் பக்க வாதம் ஏற்பட்டவர்களுக்கு ரத்த ஓட்டத்தை சீர் செய்வதற்கான மருந்தை தயார் செய்யலாம். இதற்கு தேவையான பொருட்கள் பூண்டு பற்கள் 5, மஞ்சள் பொடி, பால். இந்த பூண்டு பற்களை கால் டம்ளர் அளவு பாலில் வேக வைக்க வேண்டும். பூண்டு வெந்தவுடன் இதனுடன் சிறிதளவு மஞ்சள் பொடி சேர்க்கவும். பின்னர் ஒரு கொதி வந்தவுடன் அடுப்பை நிறுத்தி விடலாம். பூண்டு, சமையல் மஞ்சள், பாலில் இட்டு கொதிக்க வைத்து இரவில் குடிப்பதால் பக்க வாதம் வருமோ என்ற அச்சத்தில் இருந்து நாம் விடுபடலாம். பக்க வாதம் வராமல் தடுக்கலாம்.

பக்க வாதம், முகவாதம் வந்து தடுமாறும் நிலையிலும் கூட இந்த பூண்டு, மஞ்சள் ஆகியவற்றை கலந்து கொதிக்க வைத்த பாலை பருகி வருவதால் மிகுந்த பயனை நா ம் அடையலாம். இரவில் இந்த பூண்டு மஞ்சள் பாலை பருகுவதன் மூலம் மூளைக்கு செல்லும் ரத்த குழாய்களில் அடைப்பு ஏற்படாமல் தடுக்கும். ரத்த ஓட்டம் சீராக இருக்கும். இது போன்று அன்றாடம் நமது வீட்டு சமையலறையில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டே மிகச் சிறந்த மருந்துகளை தயாரித்து சாப்பிட்டு உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வோம்.

# 200 மூட்டை மஞ்சள் ரூ.11 லட்சத்துக்கு ஏலம்




திருச்செங்கோடு: திருச்செங்கோடு கூட்டுறவு விற்பனை சங்கத்தில் 200 மூட்டை மஞ்சள் ரூ.11 லட்சத்துக்கு விற்பனையானது. நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று மஞ்சள் ஏலம் நடந்தது. இதில் ஆத்தூர், கெங்கவல்லி, கூகையூர், கள்ளக்குறிச்சி, பொம்மிடி, அரூர், ஜேடர்பாளையம், பரமத்திவேலூர், நாமக்கல், மேட்டூர், பூலாம்பட்டி ஆகிய பகுதிகளிலிருந்து மஞ்சள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டிருந்தது. ஈரோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, சேலம் ஆகிய பகுதியை சேர்ந்த 30க்கும் மேற்பட்ட வியாபாரிகள் கலந்துகொண்டனர். டெண்டர் மூலம் ரூ.11 லட்சத்துக்கு மஞ்சள் விற்பனையானது.

விரலி ரகம் குவிண்டாலுக்கு ரூ.7,889 முதல் ரூ.8,859 வரையும், கிழங்கு ரகம் ரூ.7,505 முதல் ரூ.7,789 வரை விலைபோனது. பனங்காளி வரத்து இல்லை. மற்ற மார்க்கெட்டுகளை விட, விவசாயிகளுக்கு குவிண்டாலுக்கு ரூ.200 அதிகம் கிடைத்தது. மொத்தம் 200 மூட்டை மஞ்சள் ரூ.11 லட்சத்திற்கு விற்பனையானது.

**புரட்டாசி மாதம் துவங்கியது காய்கறி விலை உயர்ந்தது**

கோவை, : புரட்டாசி மாதம் பெரும்பாலானோர் சைவ உணவை மேற்கொள்வதால், காய்கறிகளின் விலை உயர்ந்து வருகிறது. கோவையிலுள்ள மொத்த காய்கறி மார்க்கெட், உழவர் சந்தைகள், சில்லரை விற்பனை நிலையங்களில் கடந்த 2 நாட்களுக்கு முன்பு வரை நிலவிய காய்கறிகளின் விலையை விட புரட்டாசி மாதம் துவங்கிய நேற்று முன்தினம் முதல் விலை உயரத்துவங்கியுள்ளது.

புரட்டாசி மாதத்தில் பெரும்பாலானோர் அசைவ உணவை தவிர்த்து, சைவ உணவுக்கு முக்கியத்துவம் கொடுப்பதால், காய்கறி விற்பனை அதிகரித்துள்ளது. அதோடு விலையும் உயர்ந்துள்ளது.

கடந்த வாரம் வரை ஓணம் பண்டிகையை முன்னிட்டு கேரளாவிற்கு அதிகளவில் காய்கறிகள் சென்றதால், கோவையில் காய்கறிகளின் விலை உயர்ந்து காணப்பட்டது. இந்நிலையில், புரட்டாசி மாதம் துவங்கியதை தொடர்ந்து கடந்த 2 நாட்களாக மேலும் விலை உயர்ந்துள்ளது.

கோவை உழவர் சந்தையில் நேற்றைய காய்கறி கிலோவுக்கு விலை நிலவரம் (அடைப்புக்குறிக்குள் கடந்த வார விலை) : கத்தரி ரூ.38 (34), நாட்டு தக்காளி ரூ.16 (15), ஆப்பிள் தக்காளி ரூ.20 (15), புடலங்காய் ரூ.25 (22), வாழைக்காய் ரூ.34 (30), உருளைக்கிழங்கு ரூ.40 (ரூ.36), கேரட் ரூ.45 (42), முட்டைக்கோஸ் ரூ.24 (20), பீட்ரூட் ரூ.30 (26), பீன்ஸ் சாதா ரூ.58 (52), அரிக்காட் பீன்ஸ் ரூ.80 (76), இஞ்சி ரூ.70 (65).

இது தவிர பல்வேறு காய்கறிகள் வரத்து குறைவால் கடந்த வார விலையே நீடிக்கிறது. சனி, ஞாயிறு விடுமுறை நாளிலேயே விலை உயர்ந்துள்ளதால், மற்ற நாட்களில் விலை மேலும் உயரும் வாய்ப்புள்ளது என்கின்றனர் விவசாயிகள். உழவர் சந்தை விலையை விட, சில்லரை விற்பனை கடைகளில் விலை மேலும் உயர்ந்துள்ளதால் பொதுமக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

## கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளதால் கருப்பு தேயிலை உற்பத்தி அதிகரிப்பு

குன்னூர், : உலக அளவில் தேயிலை தொழில் இந்தாண்டு முன்னேற்றமடைந்த தால் இதை சார்ந்துள்ள தொழிலாளர்களும், விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.இந்தாண்டு ஜனவரி முதல் செப்டம்பர் மாதம் 15ம்தேதி வரை தேயிலை உற்பத்தி அதிகரித்து உள்ளதுடன் அதற்கு விலையும் கூடுதலாக கிடைத்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் தேயிலை தூளின் பயன்பாடு அதிகரித்துள்ளது. கருப்பு தேயிலையை அனைத்து தரப்பினரும் விரும்பி பயன்படுத்துவதால் இந்நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்தாண்டு இந்தியாவில் மட்டும் 9 சதவீத கருப்பு தேயிலை உற்பத்தி செய்யப்பட்டது. இந்தாண்டு இதன் உற்பத்தி 15 சதவீதமாக உயர்ந்துள்ளது.இந்தாண்டு முதல் 8 மாதங்களில் கென்யா ஏல மையத்தில் 90 சதவீதம், இலங்கையில் 95 சதவீதம், இந்தோனேஷியாவில் 97 சதவீதம், இந்தியாவில் 78 சதவீதம் என வாரந்தோறும் நடக்கும் ஏலத்தில் தேயிலை தூள் விற்பனையாகி உள்ளது. இந்தியாவிலுள்ள 8 ஏல மையங்களிலும் கருப்பு தேயிலைக்கு கடும் கிராக்கி நிலவி வருகிறது.

## சிறுதானிய உற்பத்தி பயிற்சி முகாம்

கரூர்: கரூர் உப்பிடமங்கலத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் சர்ரபில், சிறுதானிய உற்பத்தி மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை தயாரிப்பது குறித்த பயிற்சி முகாம் நடைபெற்றது. மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் அல்தாப் தலைமை வகித்தார். தமிழகத்தில் உணவு மற்றும் ஊட்டசத்து பாதுகாப்பினை உறுதி செய்திட 12வது ஐந்தாண்டு திட்டத்தில் சிறுதானிய பயிர்களுக்குசிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்படுவது குறித்து விளக்கினார். மண் வகைக்கு ஏற்ற சிறுதானிய வகைகள், நுண்சத்து பற்றாக்குறை நிவர்த்தி செய்யும் முறை, உரங்கள் ஆகிய தொழில்நுட்பங்கள் பற்றி விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டது. இதில் வேளாண்மை அறிவியல் நிலைய உழவியல் தொழில்நுட்ப வல்லுனர் திருமுருகன், வேளாண்மை உதவி இயக்குனர் ரவிசந்திரன், உப்பிடமங்கலம் பேரூராட்சி தலைவர் பெருமாள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**கம்பு பயிரிட்டால் காசு பார்க்கலாம் வேளாண்துறை ஆலோசனை**

பழநி: பழநி மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களில் தற்போது விவசாய பணிகள் துவங்கி உள்ளன. தற்போது இறவை பாசன வசதி உள்ள விவசாயிகள் கம்பு பயிரிடுவது ஏற்ற தருணமாகும். கோ 7, கோ (சியு) 9, ஐசிஎம்வி 221, ராஜ் 171, எக்ஸ் 7 ஆகியவை ஏற்ற ரகங்கள் ஆகும். எக்டேருக்கு 3.75 கிலோ விதை தேவைப்படும். நாற்றாங்கால் எக்டேருக்கு 7.5 சென்ட் அளவிற்கு இருக்க வேண்டும். 3*1.5 மீட்டர் அளவு கொண்ட 6 படுக்கைகள் 1 சென்டில் அமைத்து அரை மீட்டர் கால்வாய் அரை அடி ஆழத்தில் ஒவ்வொரு படுக்கையை சுற்றி அமைக்க வேண்டும்.

எக்டேருக்கு 750 கிலோ தொழுஉரம் இட வேண்டும். தேன் ஒழுகல் நோய் பாதித்த விதைகளை நீக்க 10 லிட்டர் நீரில் 1 கிலோ உப்பினை கரைத்து விதைகளை அதில் கொட்டி மிதக்கும் விதைகளை நீக்க நல்ல தண்ணீர் கொண்டு 3, 4 முறை விதைகளை கழுவி பின்பு நிழலில் உலர்த்த வேண்டும். தண்டு ஈ மற்றும் தண்டு துளைப்பான் நோய் தாக்காமல் இருக்க குளோரிபைபாஸ் 36 டபிள்யூ.எஸ்.வி அல்லது பாசலோன் 35 இசி 4 மில்லியுடன் 5 கிராம் பசை இவற்றை 20 லிட்டர் தண்ணீரில் கலந்து விதைக்க வேண்டும். அடிச்சாம்பல் நோய் தாக்காமல் இருக்க மெட்டலாக்சில் 6 கிராம் உடன் 5 மில்லி தண்ணீர் கலந்து 1 கிலோ விதையுடன் கலக்க வேண்டும்.

விரல்களால் 1 சென்டிமீட்டர் ஆழத்திற்கு கோடுகள் இட்டு, 1 படுகைக்கு அரை கிலோ விதையினை தூவி மண்ணில் மூட வேண்டும். மிதைல் பாரதியான் மருந்தினை விதைத்தவுடன் தூவி எறும்புகளிலிருந்து பாதுகாக்கலாம். நாற்றுக்களை தண்டு ஈயிலிருந்து காப்பதற்கு கார்போபியூரான் 3ஜி 600 கிராம் கலந்து தூவி விட வேண்டும். 30 சென்டிமீட்டர் கால்வாய் மூலம் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். மண்ணில் நீர் உறிஞ்சிக்கொள்ளும் வரை மட்டும் நீர்ப்பாய்ச்ச வேண்டும். 6 மீட்டர் உள்ள பார்கள் 45 சென்டிமீட்டர் இடைவெளியில் அமைக்க வேண்டும். இடைவெளி 45*15 சென்டிமீட்டர் இடைவெளி இருக்க வேண்டும். வேளாண் அதிகாரிகள் அறிவுறுத்தியபடி உரங்கள் இட வேண்டும். இதுதொடர்பான கூடுதல் விவரங்களுக்கு விவசாயிகள் அந்தந்த பகுதியில் உள்ள வேளாண் விரிவாக்க அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாமென வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

## கூடுதல் மகசூலுக்கு திருந்திய நெல் சாகுபடி வேளாண் உதவி இயக்குனர் தகவல்

பழநி, : கூடுதல் மகசூல் பெற திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பங்களை மேற்கொள்ள வேண்டும் என பழநி வட்டார வேளாண் உதவி இயக்குநர் சுருளியப்பன் ஆலோசனை வழங்கி உள்ளார்.இதுகுறித்து அவர் கூறியதாவது: தமிழ்நாட்டில் சுமார் 50 லட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. கூடுதல் மகசூலுக்கு திருந்திய நெல் சாகுபடி என்ற முறையாகும். இச்சாகுபடியில் அதிக மகசூல் பெற தரமான சான்று பெற்ற வீரிய ஒட்டு நெல் ரகங்களை பயன்படுத்த வேண்டும். 1 ஏக்கர் நடவு செய்ய 2 கிலோ விதைகளை பயன்படுத்த வேண்டும். நாற்றாங்காலை 1 ஏக்கருக்கு 40 சதுரமீட்டர் என்ற அளவில் மண்மக்கிய தொழுஉரம் 9:1 என்ற வீதம் பரப்பி விதைக்க வேண்டும். 14 நாட்கள் வயதான நாற்றுக்களை நடவு செய்ய வேண்டும். சரியான இடைவெளிக்கு மார்க்கர் கருவிகளை பயன்படுத்த வேண்டும். 22.5 சென்டிமீட்டர் * 22.5 சென்டிமீட்டர் இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். குத்துக்கு 1 நாற்று மட்டும் நடவு செய்ய வேண்டும்.

நீர் மறைய நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். 2.5 சென்டிமீட்டருக்கு அதிகமாக நீர் நிறுத்தக்கூடாது. கோனோவீடர் கொண்டு களை எடுக்க வேண்டும். நடவு செய்த 10ம் நாள் முதல், 10 நாட்களுக்கு ஒருமுறை களை எடுக்க வேண்டும். உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போபேக்டீரியா ஏக்கருக்கு தலா 7 பாக்கெட் பயன்படுத்த வேண்டும். பச்சை இலை வண்ண அட்டையை பயன்படுத்தி தேவையான தழைச்சத்தினை மேல் உரமாக இட வேண்டும். விவசாயிகள் இதுதொடர்பான கூடுதல் விபரங்களுக்கு அந்தந்த பகுதி வேளாண் அலுவலர்களையோ, வேளாண் விரிவாக்க மையத்தையோ அணுகலாம். இவ்வாறு தெரிவித்தார்.